அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025

## தமிழ் - ஆண்டு 5

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

இனியாவும் அவளது பெற்றோரும் கடற்கரைக்குச் சென்றனர். அங்கே பலர் குடும்பமாக வந்திருந்தனர். இனியாவின் பள்ளித் தோழன் அழகன் மணல்வீடு கட்டிக்கொண்டு இருந்தான். இனியா அழகனுடன் சேர்ந்து மணல்வீடு கட்டி விளையாடினாள். அதன் பின்னர் இருவரும் பெற்றோருடன் சேர்ந்து கடலில் நீந்தி விளையாடினார்கள். அழகன் தனக்குப் பசிக்கிறது என்று கூறினான். எல்லோருமாக கடற்கரை மணலில் வந்து இருந்தனர். அழகனது அம்மாவும் இனியாவினது அம்மாவும் தாங்கள் கொண்டுவந்த உணவுகளை எல்லோருக்கும் பரிமாறினர். எல்லோரும் சுவையான உணவுகளைப் பசியாற உண்டு மகிழ்ந்தனர்.